# சென்னை மெட்ரோ ரயில் நிறுவனத்துக்கு கார்பன் குறைப்புக்காக கிரீன் ஆப்பிள் விருது



**சென்னை:** சென்னையில் தற்போது 2 வழித்தடங்களில் 54 கி.மீ தொலைவுக்கு மெட்ரோ ரயில்கள் இயக்கப்படுகின்றன. மெட்ரோ ரயில்களில் நாள்தோறும் 2.60 லட்சம் முதல் 2.80 லட்சம் பேர் பயணம் மேற்கொண்டு வருகின்றனர். மக்களின் போக்குவரத்து தேவைக்கு ஏற்ப, பல்வேறு வழித்தடங்களில் மெட்ரோ ரயில் சேவை விரிவுபடுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், சென்னை மெட்ரோ ரயில் நிறுவனத்துக்கு லண்டனின் கிரீன் ஆப்பிள் சர்வதேச விருது கிடைத்துள்ளது. கார்பன் குறைப்பு பிரிவின் கீழ், இந்த விருதில் தங்கம் கிடைத்துள்ளது. லண்டனில் உள்ள பசுமை அமைப்பு இந்த விருதை வழங்கியுள்ளது. லண்டனின் வெஸ்ட்மின்ஸ்டர் அரண்மனையில் நடைபெற்ற இவ்விழாவில் சென்னை மெட்ரோரயில் நிறுவனத்தின் சுற்றுச்சூழல் தலைமை ஆலோசகர் ராஜீவ்கே.ஸ்ரீவஸ்தவா இவ்விருதைப் பெற்றுக்கொண்டார்.

கிரீன் ஆப்பிள் விருது, உலகளவில் மிகப்பெரிய சுற்றுச்சூழல் விருதாகக் கருதப்படுகிறது. சென்னை மெட்ரோ ரயில் நிறுவனம் சுற்றுச்சூழலுக்கு உகந்த பல்வேறு முன்முயற்சிகளை மேற்கொண்டு வருவதால் இந்த விருது

கிடைத்துள்ளது. இந்தத் தகவல் சென்னை மெட்ரோ ரயில் நிறுவனம் வெளியிட்ட செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சந்திரயான்-4 திட்டத்தில் நிலவின் மாதிரிகளை பூமிக்கு கொண்டுவர திட்டம்: இஸ்ரோ விஞ்ஞானிகள் தகவல்




**சென்னை:** சந்திரயான்-4 திட்டத்தில் நிலவுக்கு விண்கலத்தை அனுப்பி, அதன் மேற்பரப்பில் உள்ள மாதிரிகளைச் சேகரித்து மீண்டும் பூமிக்கு அவற்றை கொண்டுவர இஸ்ரோ திட்டமிட்டுள்ளதாகத் தகவல்கள் கிடைத்துள்ளன.

இந்திய விண்வெளி ஆய்வு நிறுவனம் (இஸ்ரோ) தயாரித்து அனுப்பிய சந்திரயான்-3 விண்கலத்தின் 'விக்ரம்' லேண்டர் கடந்த ஆகஸ்ட் 23-ம் தேதி வெற்றிகரமாக நிலவில் தரையிறங்கியது.

அடுத்த கட்டமாக ஜப்பானுடன் சேர்ந்து சந்திரயான்-4 திட்டத்தைச் செயல்படுத்த இந்தியா முடிவு செய்துள்ளது. சந்திரயான்-4 திட்டம் லூபெக்ஸ் எனும் பெயரில் செயல்படுத்தப்பட உள்ளது. இத்திட்டத்தில் ரோபோட் தொழில்நுட்பத்திலான ரோவர் மற்றும் லேண்டரை நிலவுக்கு அனுப்பி ஆய்வு செய்வதுடன், அதன் மேற்பரப்பில் உள்ள மாதிரிகளை சேகரித்து பூமிக்குக் கொண்டு வருவதற்கான முயற்சிகளும் மேற்கொள்ளப்பட உள்ளதாகத் தகவல்கள் கிடைத்துள்ளன.

இதுகுறித்து இஸ்ரோ விஞ்ஞானிகள் சிலர் கூறும்போது, “சந்திரயான்-4 திட்டத்தில் லேண்டரை இந்தியாவும், ரோவரை ஜப்பானும் வடிவமைக்க உள்ளன. இவற்றின் ஆயுட்காலம் 6 மாதங்களாகும். இது முந்தைய திட்டங்களைவிட சவாலானதாகும். ஏனெனில், விண்கலத்தை நிலவில் தரையிறக்கி மாதிரிகளைச் சேகரித்து, பின்னர் மீண்டும் பூமிக்குக் கொண்டுவர வேண்டும். இதற்காக 4 விதமான கலன்கள் விண்கலத்தில் இணைக்கப்பட உள்ளன. மேலும், அதிலுள்ள ரோவரின் எடை மட்டும் 350 கிலோவாகும். ரோவரில் நிலவின் மேற்பரப்பில் துளையிட வசதியாக நவீன இயந்திரங்கள் இடம்பெறும். இதன்மூலம் நிலவில் உள்ள மணற் துகள்கள், நீர் மூலக்கூறுகள் போன்ற மாதிரிகளை எளிதாகச் சேகரிக்க முடியும்.

அதேபோல், சந்திரயான்-3 திட்டத்தில் இடம்பெற்ற ரோவர் நிலவின் மேற்பரப்பில் 500 மீட்டர் சுற்றளவில்தான் வலம் வந்து ஆய்வு செய்தது. ஆனால், சந்திரயான் 4-ல் அனுப்பவுள்ள ரோவர் அதிகபட்சம் ஒரு கி.மீட்டர் ஊர்ந்து சென்று ஆய்வு செய்யும் வகையில் வடிவமைக்கப்பட உள்ளது. அனைத்து பணிகளையும் முடித்து அடுத்த 2 ஆண்டுகளுக்குள் இந்த திட்டத்துக்கான முதற்கட்ட சோதனையை நடத்தி முடிக்க இலக்கு வைக்கப்பட்டுள்ளது. நிலவின் இருள் நிறைந்த தென்துருவப் பகுதிகளை முழுமையாக ஆராய்வதே சந்திரயான்-4 திட்டத்தின் நோக்கமாகும்” என்றனர்.

## இன்று கூடுகிறது காணொளி காட்சி ஜி20 உச்சிமாநாடு: ரஷ்யா மற்றும் கனடா அதிபர்கள் பங்கேற்பு



**புதுடெல்லி:** காணொளி காட்சி ஜி20 உச்சிமாநாடு பிரதமர் நரேந்திர மோடி தலைமையில் இன்று நடைபெற உள்ளது. இதில், ரஷ்ய அதிபர் விளாடிமிர் புடின், கனடா அதிபர் ஜஸ்டின் ட்ரூடோ உள்ளிட்டோர் பங்கேற்கிறார்கள்.

கடந்த செப்டம்பர் 9 மற்றும் 10 ஆகிய தேதிகளில் புதுடெல்லியில் ஜி20 உச்சிமாநாடு நடைபெற்றது. இதில், ஜி20 அமைப்பின் உறுப்பு நாடுகள் மற்றும் சிறப்பு அழைப்பாளர்கள் பங்கேற்றனர். அப்போது, ஜி20 மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களின் நிலை குறித்து மீண்டும் ஆய்வு செய்ய காணொளி காட்சி வாயிலாக ஜி20 உச்சி மாநாடு நடத்தப்படும் என பிரதமர் மோடி அறிவித்தார். அதன்படி, காணொளி காட்சி உச்சிமாநாடு இன்று நடைபெறுகிறது.

இஸ்ரேல்-ஹமாஸ் இடையே மோதல் ஏற்பட்டு வரும் சூழலில் நடைபெறும் இந்த மாநாட்டிற்கு பிரதமர் மோடி தலைமை வகிக்கிறார். கடந்த செப்டம்பரில் நடைபெற்ற ஜி20 மாநாட்டில் பங்கேற்காத ரஷ்ய அதிபர் விளாதிமிர் புடின், இந்த மாநாட்டில் பங்கேற்கிறார். இதேபோல், கடந்த ஜி20 உச்சிமாநாட்டிற்குப் பிறகு இந்தியா - கனடா இடையே மோதல் போக்கு ஏற்பட்டது. இதையடுத்து, பிரதமர் மோடியும், கனடா அதிபர் ஜஸ்டின் ட்ரூடோவும் சந்திக்கும் முதல் மாநாடாக இந்த மாநாடு விளங்க உள்ளது. சீன பிரதமர் லி கியாங் இந்த மாநாட்டில் கலந்து கொள்வார் என அந்நாடு நேற்று உறுதி அளித்துள்ளது.

இந்த உச்சிமாநாடு தொடர்பாக செய்தியாளர்களிடம் பேசிய இந்தியாவின் G20 ஷெர்பா அமிதாப் காந்த், "காணொளி காட்சி வாயிலாக ஜி20 உச்சிமாநாடு நடத்துவது அரிதானது; விதிவிலக்கானது. ஜி20 உச்சிமாநாட்டின் தலைமை டிசம்பரில் பிரேசிலுக்குச் செல்கிறது. அதற்கு முன் இந்தியாவின் G20 தலைமையின் கீழ் உலகத் தலைவர்கள் பங்கேற்கும் இரண்டாவது உச்சிமாநாடாக இது இருக்கும். ஜி 20 தலைவர்களில் பெரும்பாலோர் கலந்துகொள்வார்கள்; சிறந்த பங்கேற்பை அளிப்பார்கள். உலகத் தலைவர்களுடன் பிரதமர் மோடி உரையாடுவதற்கான வாய்ப்பை இது வழங்கும்.

செப்டம்பர் G20 உச்சிமாநாட்டிற்குப் பிறகு பல சவால்கள் தோன்றியுள்ளன. இந்த உச்சிமாநாட்டின் முதன்மை நோக்கமாக வளர்ச்சி இருக்கும். அதோடு,

தலைவர்கள் எண்ணற்ற பிற பிரச்சினைகள் குறித்து விவாதங்களில் ஈடுபடலாம். புவி-அரசியல் பதட்டங்கள் குறித்த பிரச்சினைகள் கூட்டத்தில் எழுப்பப்பட்டால், அதற்கு இந்தியா எவ்வாறு பதில் அளிக்கும் என்பதை முன்கூட்டியே கூறுவது சரியாக இருக்காது. இந்த உச்சி மாநாடு தலைவர்களின் அறிவிப்பை செயல்படுத்துவது பற்றி விவாதிக்க மட்டுமல்லாமல், தலைவர்கள் கருத்துக்களைப் பகிர்ந்து கொள்ளவும், முக்கியமான சவால்களில் ஒத்துழைப்பை மேம்படுத்தவும்தான்.

உலகளாவிய நிர்வாகத்தில் உள்ள இடைவெளிகளை நிவர்த்தி செய்வது, நிலையான வளர்ச்சி இலக்குகளுக்கான (SDGs) அர்ப்பணிப்புடன் மீண்டும் உறுதிப்படுத்துவது ஆகியவை இந்த மாநாட்டின் நோக்கமாக இருக்கும். டிசம்பர் 1 முதல் ஜி20 தலைவர் பதவி பிரேசிலிடம் ஒப்படைக்கப்படும். கூட்டத்தில் பல பிரச்சினைகள் பற்றி விவாதிக்கப்படும். காசா நிலைமை தொடர்பான விவாதங்கள் மீது அனைவரது பார்வையும் உள்ளது" என தெரிவித்தார்.


## உலக பில்லியர்ட்ஸ் சாம்பியன்ஷிப்: 26-வது முறையாக பங்கஜ் அத்வானி சாம்பியன்




**தோஹா:** உலக பில்லியர்ட்ஸ் சாம்பியன்ஷிப்பில் பங்கஜ் அத்வானி 26-வது முறையாக சாம்பியன் பட்டம் வென்றார்.

ஐபிஎஸ்எஃப் உலக பில்லியர்ட்ஸ் சாம்பியன்ஷிப் கத்தார் நாட்டில் தலைநகரான தோஹாவில் நடைபெற்றது. இதன் இறுதிப்போட்டியில இந்தியாவின் பங்கஜ் அத்வானி, சகநாட்டைச் சேர்ந்த சவுரவ் கோத்தாரியை எதிர்த்து விளையாடினார். இதில் பங்கஜ்அத்வானி 1000–416 என்ற புள்ளிகள் கணக்கில் வெற்றி பெற்று சாம்பியன் பட்டம் வென்றார். உலக பில்லியர்ட்ஸ் சாம்பியன்ஷிப்பில் பங்கஜ் அத்வானி பட்டம் வெல்வது இது 26-வது முறையாகும்.

## இந்தோனேசியாவில் சக்திவாய்ந்த நிலநடுக்கம்: ரிக்டர் அளவில் 6 ஆக பதிவு



இந்தோனேசியா

**புதுடெல்லி:** இந்தோனேசியாவின் கிழக்குப் பகுதியில் இன்று சக்திவாய்ந்த நிலநடுக்கம் பதிவாகியுள்ளது. இந்த நிலநடுக்கத்தால் ஏற்பட்ட சேதம் மற்றும் உயிரிழப்புகள் பற்றி இதுவரை தகவல்கள் எதுவும் வெளியாகவில்லை.

இந்தோனேசியா, ஒரு பரந்த நிலப்பரப்பாகும். அங்கு 270 மில்லியனுக்கும் அதிகமான மக்கள் வசிக்கின்றனர். இங்கு அடிக்கடி நிலநடுக்கம் ஏற்படுகிறது. அந்த வகையில், இந்தோனேசியாவின் கிழக்குப் பகுதியில் கடுமையான நிலநடுக்கம் பதிவாகியுள்ளது. இந்த நிலநடுக்கம் ரிக்டர் அளவில் 6.0 ஆகப் பதிவாகியுள்ளது. இது இந்தோனேசியாவின் வடக்கு மலுகு மாகாணத்தில்

டோபெலோவிற்கு மேற்கே 94 கி.மீ (58 மைல்) தொலைவில் 116 கி.மீட்டர் (72 மைல்) ஆழத்தில் தாக்கியுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

இந்தோனேசியாவின் வானிலை, தட்பவெப்பவியல் மற்றும் புவி இயற்பியல் நிறுவனம் (Indonesia's Meteorology, Climatology and Geophysical Agency) சுனாமி ஏற்படுவதற்கான வாய்ப்புகள் இல்லை எனத் தெரிவித்துள்ளது. மேலும் நிலநடுக்கத்தால் ஏற்பட்ட சேதம் மற்றும் உயிரிழப்புகள் பற்றி தகவல்கள் எதுவும் வெளியாகவில்லை.

மேற்கு ஜாவாவின் சியாஞ்சூர் நகரில் கடந்த ஆண்டு 5.6 ரிக்டர் அளவில் ஏற்பட்ட நிலநடுக்கத்தில் 331 பேர் உயிரிழந்தனர் மேலும் 600 பேர் காயமடைந்தனர். 2018 ஆம் ஆண்டு சுலவேசியில் ஏற்பட்ட நிலநடுக்கம் மற்றும் சுனாமியால் சுமார் 4,340 பேர் கொல்லப்பட்டது குறிப்பிடத்தக்கது

EVA STALIN IAS AC